Vol. 5, Issue-1, June 2021 P.No. : 64 - 69

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

http://shcpub.edu.in

**வெ.காமினி,**
*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*தூய நெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் - 635601*

---

# **தலைப்பு :** அகநானூற்றின் வழி அறியலாகும் நெல்லிமரம்

---

## முன்னுரை

சங்க இலக்கியம் என்பது தமிழில் பல ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும். வாழ்வியலின் பல்வேறு கூறுகளைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. மனித இதயத்தின் உணர்வுகளையும், இயற்கையின் எழிலையும், நெருங்கிப் பிணைப்புடையனவாய் இனிய உறவுடையனவாய் காதலுணர்வின் பல நிலைகளையும் எடுத்துரைக்கின்றன. சங்க நூல்கள் முன் வைக்கும் ஐந்திணைக் கோட்பாட்டில் நெல்லி மரங்கள் குறித்து இவ்வாய்வுக் கட்டுரை ஆராய்கிறது.

## நெல்லி மரம்

நெல்லி ஒரு வகையான மரம். பசிய சிறு இலைகள் கொண்டது. மலைப்புறத்தில் வளர்வது. திரண்ட அடிப்பகுதியைக் கொண்டது.

## நெல்லி மரத்தின் வேறு பெயர்

“ஆமலகம், ஆலகம்,ஆம்பல், ஆமரிகம், தாத்தாரி, தாத்திரி, கோரங்கம், மிறுதுபலா, மீதுந்து” என்ற பெயர்களை குணபாடம் என்ற நூல் எடுத்துரைக்கிறது.

## நெல்லி மரத்தின் வகைகள்

கருநெல்லி, அருநெல்லி, காட்டுநெல்லி என வேறு இனங்களும் உண்டு என்பதை க. முருகேசமுதலியார் (குணபாடம், பக்கம் - 600) எடுத்துரைக்கிறார்.

**இலை**

நெல்லியின் இலை பறவையின் இறகுகள் போல நீண்ட காம்பில் சிறு சிறு இலையாக காணப்படும். இதனை சங்க கால நூல்கள் ' புள்ளிலை' என்று கூறுகிறது.

**காய்**

நெல்லியின் காய் பச்சையாய் இருக்கும் போது வெண்மஞ்சள் நிறமாகவும், உலர்ந்த பின் கருப்பு நிறமாகவும், சுவை மிக்கதாகவும் இருக்கும். முதிர்ந்த நெல்லிக்கனி தானே உதிர்ந்து விடும். சுரத்திடையே போவோர் தண்ணீர் தாகத்திற்காக உண்பர். இது மருந்து பொருளாகப் பயன்படுகிறது. சங்க இலக்கியத்தில் உயிரைக் காக்கும் நெல்லியாக கூறப்படுகிறது. இது மே மாதத்தில் காய்க்கும்.

**பூக்கும் பருவம்**

நெல்லி மலர் மார்ச் முதல் ஏப்ரல் வரை பூக்கும்.

**நெல்லியின் அமைப்பு**

ஓமை மரங்கள் நிறைந்த காட்டில் பளிங்கு போன்ற நெல்லிக்காய்கள் உயர்ந்த பெரிய பாறைகளில் சிறார்கள் பாண்டிலாடுவதற்குக் குவித்து வைத்திருக்கும் வட்டுக்களைப் போல உதிர்ந்து கிடந்தது என்பதை,

***"முளிந்த ஓமை முதையல் அம் காட்டு,***
***பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி***
***மோட்டு இரும் பாறை, ஈட்டு வட்டு ஏய்ப்ப,***
***உதிர்வன படூஉம் கதிர் தெறு கவாஅன்"*** ***(அகம். 5 : 8 -11)***

இந்தப் பாடலின் மூலம் அறியலாம்.

**நெல்லியின் தோற்றம்**

நெல்லிக்காய்களைப் போன்று குறுமுயல்களின் கண்கள் இருக்கின்றன என்பதை,

***" சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன***
***குறுவிழிக் கண்ண கூரல்அம் குறுமுயல்"*** ***(அகம். 284 : 1 – 2)***

இந்த பாடலின் மூலம் நெல்லிக்காயின் தோற்றம் வெளிப்படுகிறது.

**நெல்லியின் சிறப்பு**

பண்ணன் என்பவன் வாழும் சிறுகுடி என்னும் ஊரில் அவனுடைய தோட்டத்தில் நெல்லியின் பசுமையான காய்களைத் தின்றவர் நீர் குடித்தபோது சுவை உண்டாகும் என்பதை,

***" பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்இலைப்***
***புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்***
***நீர்குடி சுவையின் தீவிய மிழற்றி"*** ***(அகம். 54 : 14 -16)***

*நெல்லியின் சுவையைப் போன்று தலைவியின் மொழி இருப்பதாக தலைவன் தேர்ப்பாகனுக்கு உரைப்பதாக மாற்றூர்கிழார் மகனார் கொற்றங்கொற்றனார் என்ற புலவர் எடுத்தியம்புகிறார்.*

***உயிர்காக்கும் மருந்து***

*அரிய சுர வழிகளை நெடுந்தூரம் கடந்து செல்லக்கூடிய நீர் வேட்கை மிக்க வழிப் போக்கரின் கொல்லும் உயிரைச் செல்லவொட்டாது தடுக்கும் சுவை மிக்க காய்களைக் கொண்டது நெல்லி என்பதை,*

***" குறும்பொறை மருங்கின் கோட்சுரம் நீந்தி,***

***நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்***

***செல்உயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லி"*** ***(அகம். 271 : 5 – 7)***

*காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் பாடலின் மூலம் அறியலாம். மேலும்,*

*பாலை வழியில் உள்ள நெல்லி மரங்கள் வட்டமான இனிமையான காய்களைக் கொண்டு விளங்குகின்றன. நெல்லி மரத்தின் மேல் பஞ்சு போன்ற மயிரினையுடைய தலையினையும், சிவந்த முகத்தினையும் உடைய குரங்குகள் தாவி குதித்து விளையாடுவதை,*

***" அத்த நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்***

***வட்டக் கழங்கின் தாஅய், துய்த்தலைச்***

***செம்முக மந்தி ஆடும்,"*** ***(அகம். 241 : 13 -15)***

*இந்தப் பாடலடிகள் மூலம் காவன் முல்லைப் பூதனார் எடுத்தியம்புகிறார். மேலும் நெல்லி மரத்தின் தோற்றமானது,*

*முதலில் அறுந்து வீழ்ந்து பின்னர் மீண்டும் முளைத்தெழும் ஆண்மானின் கொம்புகள் போல படர்ந்து இருக்கும் நெல்லி காய்களை உடைய இம் மரங்கள் சிறிய இலையினையுடையதாக இருக்கும் என்பதை,*

***" சிறியிலை நெல்லித் தீம்சுவைத் திரள்காய்***

***உதிர்வன தூஅம் அத்தம் தவிர்வு இன்று"*** ***(அகம். 291 : 16 -17)***

*இந்த பாடலின் மூலம் பெருங்கடுங்கோ எடுத்துரைத்துள்ளார். புறாக்கள் கொத்தி தின்றதால் புல்லிய காய்களுடைய நெல்லிமரத்தில் மேல் காற்று வீச உதிர்ந்த பசிய நெல்லிக்காய்கள் நூல் அறுந்து போக அதனின்றும் உதிர்ந்த துளையினையுடைய பளிங்கு காசுகளைப் போல வறண்ட நிலத்தில் உதிர்ந்து வீழ்ந்து பரவி கிடந்தது என்பதை,*

***" புறவுக்குயின்று உண்ட புண்காய் நெல்லிக்***

***கோடை உதிர்த்த குவிக்கண் பசுங்காய்,***

***அறநூல் பளிங்கின் துளைக்காசு கடுப்ப,***

***வறுநிலத்து உதிரும் அத்தம், கதுமென,*** ***(அகம். 315 : 10 -13)***

*பாடலின் மூலம் அறியலாம். இதனை மேலும்,*

*நெல்லிக்காய்கள் பொற்காசுகள் போல அதாவது மஞ்சள் நிறமாக இருப்பதாக,*

***" புல்இலை நெல்லிப் புகர்இல் பசுங்காய்***

**கல்அதர் மருங்கில் கடுவளி உதிர்ப்ப**

**பொலம் செய் காசின் பொறப்பத் தாஅம்"** *(அகம். 363 : 6 -8)*

*இப் பாடலின் மூலம் குடவாயிற்கீரத்தனார் எடுத்துரைக்கிறார்.*

**உணவாகும் நெல்லிக்காய்கள்**

*மான்கள் உணவாக முற்றிய நெல்லிக்காயை உண்டதாக*

**" மைஇல் பளிங்கின் அன்ன தோற்றப்**

**பல்கோள் நெல்லிப் பைங்காய் அருந்தி**

**மெல்கிடு மடமரை ஓர்க்கும் அத்தம்"** *(அகம். 399 : 13 -15)*

*பாடலின் மூலம் அறியலாம். மேலும்,*

*கரிய மெல்லிய சிறகுகளையும், கூரிய நகங்களை உடைய வெளவால் நெல்லியின் புளித்த காயை உண்கிறது என்பதை,*

**" நீல மென் சிறை வள் உகிரப் பறவை**

**நெல்லிஅம் பளி மாந்தி அயலது"** *(குறு. 201 : 3 - 4)*

*என்ற எடுத்துரைப்பதாக இப்பாடல் அமைகிறது. மேலும்,*

*வெல்லும் போரையுடைய சோழர் குடியில் பிறந்து ஆர்க்காட்டில் வீற்றிருக்கும் அழிசி என்பவனின் பெரிய காட்டில் இருப்பதும் தனக்குக் கிட்டாததுமான நெல்லிக் கனியின் இனிய புளிச் சுவையைத் தான் பெற்றதாக வெளவால் கனவு காணும் என்பதை,*

**" வெல் போர்ச் சோழர் அழிசிஅம் பெருங் காட்டு**

**நெல்லி அம் புளிச் சுவைக் கனவியாஅங்கு** *(நற். 87 : 3 – 4)*

*என்ற பாடலின் மூலம் நக்கண்ணையார் புலவர் எடுத்துக்கூறியுள்ளார்.*

**நெல்லி வளர்ப்பு**

*சீறூர்த் தலைவன் குடும்பம் இருந்த சிற்றூரில் புன்மையான கொட்டையைக் கொண்டதாக நெல்லி மரம் விளங்கியது என்பதை,*

**" புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்க்** *(புறம். 314 : 4)*

*இந்த பாடலின் மூலம் புலவர் எடுத்தாண்டுள்ளார்.*

**உணவு – நீர்வேட்கை**

*இளமரஞ் செறிந்த சுவையையுடைய நெல்லிமரம் உடைய சோலையில் வீழ்ந்ததும் கடைதிரண்டதுமான காயைத் தின்று, வறண்ட சுனையில் உள்ள சிறிய அளவிலான நீரைப் பருகிச் சென்றனள் என்பதை,*

**" சுவைக் காய் நெல்லிப் போக்கு அரும் பொங்கர்**

**வீழ் கடைத் திரள் காய் ஒருங்குடன் தின்று**

**வீ சுனைச் சிறுநீர் குடியினன், கழிந்த** *(நற். 271 : 5 -7)*

*என்ற பாடலின் மூலம் நெல்லி மரம் பாலை நிலத்தில் இருப்பதால் உடன்போக்குச் சென்ற காலத்தில் சுரத்திடை நெல்லி தின்று நீர் பருகினர் என்ற செய்தியை அறிய முடிகிறது. மேலும்,*

*தலைவனோடு நெல்லிக் காயைத் தின்ற தலைவியின் முள்ளைப் போலக் கூரிய பற்கள் விளங்கும்படி நீ உண்ணுதலை நினைந்தேன் என்பதை,*

***" நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க***

***உணலாய்ந் திசினா லவரொடு சேய்நாட்டு"*** *(குறு. 262 : 4 -5)*

*இந்த பாடலின் மூலம் தலைவி நெல்லியைத் தின்றமையால் ஒளி இழந்த பல் நீருண்பதால் விளக்கமுறும்.*

**ஔவைக்கு நெல்லி ஈதல்**

*அதியமான் நெடுமான்அஞ்சி என்ற அதியர் கோமான், அவன் கிடைத்தற்கரிய சுவைமிக்க நெல்லிக்கனி ஒன்று கிடைக்கப் பெற்றான். இந்தக் கனியின் சிறப்புயாதெனில் உண்பவர் சாதலைத் தவிர்ப்பார். இத்தகைய கனியை ஔவையார் என்னும் புலவர்க்குக் கொடுத்தான். அந்த நெல்லிக்கனியின் சிறப்பை அதியமான் எடுத்துக் கூறாமலே ஔவையாரிடம் கொடுத்தார். ஔவையும் அதனைப் பெற்றுப் பாடுகிறார். சாதல் ஒழிய நெல்லிக்கனி கொடுத்தாய் ஆதலால் நீலமணி மிடற்றான் போல நீயும் புகழால் சாவாதிருத்தல் வேண்டும் என்று ஔவைபிராட்டி வாழ்த்துவதன் மூலம் நெல்லிக்கனியின் தன்மையும், சிறப்பும் அறியப்படுகிறது. இதனை,*

***" நீலமணி மிடற்று ஒருவன்போல***

***மன்னுகபெரும நீயே தொல்நிலைப்***

***பெருமலை விடகரத்து அருமிசைக் கொண்ட***

***சிறுயிலை நெல்லித் தீங்கனி குறியாது***

***ஆதல் நின்அகத்து அடக்கில்***

***சாதல்நீங்க, எமக்கு ஈத்தனையே!*** *(புறம். 91 : 6 – 11)*

*என ஔவைபிராட்டியார் பாடுகிறார். இதனை மேலும்,*

*பெரிய மலையின்கண் அழகு பெற்று விளங்கும் நெல்லியினது அமிழ்தத் தன்மையுடைய கனியைத் தான் நுகர்ந்து, தன் உடம்பிற்கு ஆக்கம் செய்து கொள்ளாமல் ஔவைக்குக் கொடுத்தவன் அதிகன் என்பதை,*

***" கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி***

***அமிழ்துவிளை தீம்கனி ஔவைக்கு ஈந்த"*** *(சிறுபாண் . 100 -101)*

*இந்த பாடலின் மூலம் நல்லூர்நத்தத்தனார் எடுத்தியம்புகிறார்.*

*மேலும் கொங்குமண்டலச் சதகம் என்ற நூலில்*

***" சாதலை நீக்கும் அருநெல்லி தன்கைத்***

***தமிழ் சொல் ஔவைக்கு***

***ஆதரவோடு கொடுத்த"***

என்ற பாடலின் மூலம் கார்மேகக் கவிஞர் எடுத்துரைத்துள்ளார். மேலும், வடமலை வெண்பா என்ற நூலில்

**" நெல்லிக்கனி அமுதை ஔவைக் களித்து**

**வேலதிகன்**

**மல்கு புகழ் கொண்டான் வடமலையே"**

இந்த பாடலின் மூலம் அறியலாம்.

**கற்பக மூலிகை : நெல்லி**

நெடுநாள் வாழ வைக்கும் கருநெல்லி உற்பத்தி செய்முறை போகர் முதலாம் ஆயிரத்தில் உள்ளது. இதன்படி சுமார் 15 வருடத்திற்கு முன்பு ஆய்வு செய்து பார்த்ததில் இலை, பூ, காய். மரம் கறுப்பானது. முதலில் சிறிய கருநிற பள்ளிகள் தோன்றி முழுவதும் நாளடைவில் கருநிறமானது. நெல்லி மரத்திலும், வாழை மரத்திலும் கருநிறமாற்றம் ஏற்பட்டது. வாழைக்காயை சாதத்தில் போட்டு வேக வைத்து பார்க்க சாதம் கருப்பானது உண்மையே. இதை வைத்துப் பார்க்கும் போது சித்தர்கள் கூறும் கருநெல்லி வைப்பு சாத்தியமாக உள்ளது. தற்போது ஆய்வுக்கு எடுத்த மரங்கள் பட்டுப் போய்விட்டது. இந்த ஆய்வில் சேராங்கொட்டை என்னும் விதையை பூமியில் போட்டு பல முறை உலர்த்தி நிலத்தைப் பதப்படுத்தி செடியை பலமுறை மாற்றி நட்டு மரமாக்கி பார்த்ததில் பயன் தந்தது. வாழை மரத்தையும் ஆய்வுக்கு எடுத்ததின் நோக்கம் எளிதில் முடிவு கிடைக்கும் என்பதால் எடுத்தோம். கருநெல்லி இயற்கையில் கிடைப்பது அரிதானது என்பதை,

**" மருவவே கறுப்பான மூலி தன்னை**

**வைக்கிறதோர் முறையினது வன்மை கேளு**

**----------------------------------------------------" (போகர்முதலாமாயிரம். ப.559- 563)**

இத்தகைய கற்ப இனங்களில் ஒன்றான நெல்லியைத்தான் அதியமான் ஔவைக்கு கொடுத்திருப்பாரோ என நினைக்கத் தோன்றுகிறது. தற்போது சித்தர், போகர் 7000 முதலாமாயிரத்தில் பல்வேறு கற்பக மூலிகைகளைக் கருநிறமாக மாற்றும் முறைகளை அறிய முடிகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் காணப்படும் மரங்கள் பல கோயில்களில் தல விருட்சமாகவும், பல ஊர்களின் பெயரையும் கொண்டு விளங்குகிறது. நெல்லி மரத்தின் இலை, பூ, காய், கனியின் சிறப்பு, கற்பமாகவும், மருத்துவ குணம் நிறைந்ததாகவும் விளங்குகிறது. மேலும் நெல்லியின் வளரிடம், அதனால் பயன்பெறும் மனிதன் உள்ளிட்ட உயிரினங்கள் பற்றியும் இந்த ஆய்வுக் கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள் :**


முருகேச முதலியார். க. ச - குணபாடம் (பொருட்பண்பு), இந்திய மருத்துவம், ஓமியோ பதித்துரை.

செயபால். இரா - அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

பாலசுப்பிரமணியன் . கு. வெ - புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

மாணிக்கம்.அ - பத்துப்பாட்டு, வர்த்தமான பதிப்பக வெளியீடு.

பாலசுப்பிரமணியன் . கு. வெ - நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

உ. வே. சா. - குறுந்தொகை, டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம்.

நாராயணன். ஆர். எஸ் - வாழ்வு தரும் மரங்கள், தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி). லிட்.

*தியாகராசன்.இரா - போகர் ஏழாயிரம் முதலாமாயிரம், திரிபுரம் அச்சகம்.*